**செய்தி வெளியீடு எண்: 602** **நாள்: 11.10.2012**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் 9.10.2012 அன்று தலைமைச் செயலகத்தில், 2011–2012ஆம் நிதி ஆண்டிற்கான தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி மற்றும் மேம்பாட்டு வங்கியின் (ரெப்கோ வங்கி) ஈவுத் தொகையான 60 லட்சத்து 76 ஆயிரத்து 603 ரூபாய்க்கான காசோலையினை பொதுத்துறைச் செயலாளர் வழங்கினார்.

தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி மற்றும் மேம்பாட்டு வங்கி (ரெப்கோ வங்கி) இலங்கை மற்றும் பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியோரின் மறுவாழ்வுப் பணிகளை மேம்படுத்தும் நோக்கத்தோடு துவக்கப்பட்டது. இவ்வங்கியின் தலைமையிடம் சென்னையிலும், கிளைகள் தமிழகம், ஆந்திரப் பிரதேசம், கேரளா மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் செயல்பட்டு வருகின்றன. இந்த வங்கி, தாயகம் திரும்பியோருக்கு அதிகமாகப் பணிகள் வழங்கும் தொழிற்சாலைகளுக்கு கடன் உதவி வழங்குதல், சுயஉதவிக் குழுக்களுக்கு கடனுதவி வழங்குதல், மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்குதல் போன்ற திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு அரசு ரெப்கோ வங்கிக்கு 3 கோடியே 3 லட்சம் ரூபாய் மூலதனப் பங்கு வழங்கியுள்ளது. ரெப்கோ வங்கி 31.3.2012 அன்றுள்ளபடி 70 கோடியே 61 லட்சம் ரூபாய் வர்த்தகம் புரிந்து 35 சதவிகித வளர்ச்சியை எட்டி, 2011–2012ஆம் ஆண்டிற்கு 20 சதவிகிதம் ஈவுத் தொகையை அறிவித்துள்ளது. இந்த 20 சதவிகித ஈவுத் தொகையில் தமிழக அரசின் பங்கான 60 லட்சத்து 76 ஆயிரத்து 603 ரூபாய்க்கான காசோலையினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் 9.10.2012 அன்று தலைமைச் செயலகத்தில் பொதுத்துறைச் செயலாளர் வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர், ரெப்கோ வங்கியின் மேலாண்மை இயக்குநர், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள்: 11.10.2012